

# காப்புறுதியொன்றைக் கொள்வனவு செய்தல்


INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு











2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் 2001 மார்ச் மாதம் நிறுவப்பட்ட இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் நோக்கம் மற்றும் பொறுப்பாக அமைவது, நிகழ்கால மற்றும் எதிர்கால காப்புறுதிப் பூட்கையாளர்களை பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கை காப்புறுதித் தொழிலின் கௌரவத்துடன் தொழில் ரீதியாகவும் மற்றும் விவேகத்துடன் நடாத்தப்படுவதை உறுதி செய்தலாகும்.

அதன்படி, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்திற்கு அமைவாக, ஒழுங்குவிதிகள், சுற்றுநிரூபம், பணிப்புரை மற்றும் ஏற்பாடுகளை தயாரிப்பதற்கு அவசியமான திருத்தங்களைம் ஏனைய உரிய உப சட்டங்களையும் தயாரிப்பதன் ஊடாக காப்புறுதிக் கைத்தொழிற்முறையின் வளர்ச்சிக்கும் மற்றும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பிற்கும் தொடர்ந்தும் வழமையான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

காப்புறுதி என்பது சட்ட ரீதியான ஒப்பந்தமாகும். அது நீங்களும் உங்கள் காப்புறுதி நிறுவனத்திற்குமிடையில் மேற்கொள்ளும் ஒப்பந்தமாகும். ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சட்டரீதியான பிரச்சினைகள் எழமாட்டாது. காப்புறுதியைக் கொள்வனவு செய்கையில் முழுமையான விளக்கத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதனால் காப்புறுதிப் பூட்கையைக் கொள்வனவு செய்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் காப்புறுதியின் முக்கியத்துவம் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுதல் காப்புறுதிக் கைத்தொழிற்துறையினதும் அதனுடன் சேர்ந்த அனைத்து தரப்பினரினதும் பொறுப்பாகும்.

# 1.

## காப்புறுதிப் பூட்கையொன்றை கொள்வனவு செய்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்க்ள்.




நபர்கள் மற்றும் நிறுவனத்தினால் முகம்கொடுக்கும் இடர்களை காப்பீடு செய்யும் வகையில் வழங்கப்படும் பல்வேறு காப்புறுதிகள் காணப்படுவதுடன், இவ்வாறு காப்புறுதிப் பூட்கைகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்தத்திற்கு வருதல் என்பவற்றுக்கான சட்ட ரீதியான அதிகாரம், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மாத்திரமே உள்ளது. இவ்வாறு பதிவுசெய்த காப்புறுதி நிறுவனங்கள் பற்றிய விபரங்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அழைப்பதன் ஊடாக அல்லது அதன் இணையத் தளத்திற்கு நுழைவதன் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

(https://ircsl.gov.lk/insurance-companies/)

# 2.

## எந்த நிறுவனத்திற்கு காப்புறுதிப் பூட்கையை விற்பனை செய்வதற்கு சட்டரீதியாக அதிகாரம் உள்ளது?



காப்புறுதிப் பூட்கைகளை விற்பனை செய்வதற்கான அதிகாரம் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்களுக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவர் நிறுவனங்களுக்கு அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே உள்ளது.

தற்போது தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணத்தினால் காப்புறுதி நிறுவனம் மற்றும் காப்புறுதி தரகர் நிறுவனம் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி காப்புறுதிப் பூட்கைகளை விற்பனை செய்கின்றது. எனினும், இங்கு முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், காப்புறுதிப் பூட்கையைக் கொள்வனவு செய்கையில் சட்டரீதியாக உரிமையுடைய நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்வனவு செய்தல் வேண்டும். யாரேனும் நபருக்கு காப்புறுதிப் பூட்கையை விற்பனை செய்வதற்கு சட்டரீதியாக உரிமையுள்ளதா எனும் சந்தேகம் எழுமாயின், உரிய காப்புறுதி நிறுவனத்திடம், காப்புறுதி தரகர் நிறுவனத்திடம் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிடம் வினவி அறிந்துகொள்ள முடியும்.

“ காப்புறுதிப் பூட்கைகளை விற்பனை செய்வதற்கான அதிகாரம் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்களுக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவர் நிறுவனங்களுக்கு அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே உள்ளது. ”

இடைத்தரகர்கள் தொடர்பாக கூறுவோமாயின், காப்புறுதி தரகர் நிறுவனத்திற்கு பதிவுசெய்த எந்தவொரு காப்புறுதி நிறுவனம் தொடர்பாகவும் தனது சேவையை வழங்கமுடியும் என்பது விசேடமான ஒரு காரணியாக அமைவதுடன், காப்புறுதி முகவருக்கு தனது சேவையை தான் சேவை வழங்கும் உரிய காப்புறுதி நிறுவனத்திற்கு (ஒரு ஆயுட் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள காப்புறுதி நிறுவனம் மற்றும் ஒரு பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனம்) அல்லது உரிய காப்புறுதி தரகர் நிறுவனத்திற்கு மட்டுமே வழங்க முடியும். முகவராக இருந்தாலும், தரகர் நிறுவனமாக இருந்தாலும், தாம் விற்பனை செய்யும் காப்புறுதிப்பூட்கை தொடர்பாக சிறந்த அறிவினைக் கொண்டிருத்தல் முக்கியமானதாகும்.

INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

# 3. எவ்வாறு தமக்கு பொருத்தமான காப்புறுதிப்பூட்கையை மட்டும் கொள்வனவு செய்வது?



- காப்புறுதிப்பூட்கையைக் கொள்வனவு செய்வதற்கான தேவை எது என்பதை நீங்கள் முதலில் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னர் உங்களின் காப்புறுதி நிறுவனத்திடம், காப்புறுதி தரகர் நிறுவனத்திடம் அல்லது முகவரிடம் அது பற்றி வினவி விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

- தன்னால் கொடுப்பனவு செய்யக்கூடிய தவணைக் கட்டணத்திற்குரிய காப்புறுதிப் பூட்கையைக் கொள்வனவு செய்தல் முக்கியமானதாகும். ஆயுட்காப்புறுதிக்கு நீண்ட காலத்திற்கு தவணைக் கட்டணத்தை செலுத்த வேண்டியேற்படுவதனால், அந்தக் காலத்தினுள் தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யக்கூடிய தவணைக் கட்டணத்தை தேர்ந்தெடுத்தல் மிகப் பொருத்தமானதாகும். தேவையற்ற மேலதிக காப்புறுதிப்பூட்கைகளுக்கு செல்லாமல் இருப்பது மிக முக்கியமான ஓர் விடயமாகும். தமக்கு பொருத்தமான காப்புறுதிப்பூட்கை மற்றும் தாங்கிக்கொள்ளக்கூடிய தவணைக் கட்டணம் என்பது தொடர்பாக உங்களால் மட்டுமே தீர்மானிக்க முடியும் என்பதனால், அது தொடர்பாக கவனத்தில் கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். கொள்வனவு செய்யும் காப்புறுதிக்குரிய விண்ணப்பப்படிவம்Æ காப்புறுதிக்கு உரிய கையேடு என்பவற்றை முழுமையாக வாசித்து விளங்கிக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், காப்புறுதி இழப்பீடு வழங்கும் சந்தர்ப்பம் மற்றும் காப்புறுதி இழப்பீடு வழங்கப்படாத சந்தர்ப்பம் அதாவது தவிர்க்கப்படும் (exclusions) சந்தர்ப்பங்கள் என்பது தொடர்பாகவும் அறிந்துகொள்ளுதல் முக்கியமானதாகும். காப்புறுதிப்பூட்கையினைக் கொள்வனவு செய்கையில் அவசரப்படக்கூடாது என்பதுடன், அனைத்து தகவல்களையும் வாசித்து தீர்மானத்தையெடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாக, காப்புறுதிப்பூட்கையைக் கொள்வனவு செய்ததன் பின்னர் எழும் விளக்கமின்மையைக் குறைத்துக்கொள்வதற்கு இயலுமாகும்.

> “காப்புறுதிப்பூட்கையைக் கொள்வனவு செய்வதற்கான தேவை எது என்பதை விளங்கிக்கொண்டு அதற்கு பொருத்தமான காப்புறுதிப் பூட்கையைப் பெற்றுக்கொள்ளல் முக்கியமானதாகும்.”

- காப்புறுதி நிறுவனம், தரகர்கள் மற்றும் முகவர்களினால் விற்பனை செய்யப்படும் காப்புறுதிப்பூட்கைகள் தொடர்பாக சிறந்த விளக்கத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், காப்புறுதிப்பூட்கையைக் கொள்வனவு செய்யும் தரப்பினருக்கு உரிய வகையில் அறிவூட்டுதலையும் அவர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். காப்பறுதியைக் கொள்வனவு செய்யும் பாவனையாளரின் தேவை மற்றும் பொருத்தமானதை விற்பனை செய்வதற்கான பொறுப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

# காப்புறுதி விண்ணப்பப்படிவம்/ முன்மொழிவு தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் என்ன?

4.




தமக்கு தேவையான காப்புறுதிப்பூட்கையைக் கொள்வனவு செய்கையில் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் எனப்படும் முன்மொழிவுப் படிவம் (ீசழிழளயட குழசஅ) முக்கிய ஆவணமாக கருதப்படுகின்றது. மிகுந்த கவனத்துடன் இதனை நிரப்புதல் முக்கியமானதாகும். அதற்குக் காரணம், காப்புறுதி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் இடர் தீர்மானங்களின் போது இது முக்கியமான ஆவணமாக அமையும் என்பதனாலாகும். ஏதேனும் கோரிக்கைகளை மேற்கொள்ளும் போது இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் முக்கியமானதாகக் கருதப்படும். தமக்காக வேறொருவர் அல்லது பிரதிநிதி விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்கையில் அதனை வாசித்துப் பார்த்து, அது சரியாயின் மாத்திரம் கையொப்பமிடுதல் வேண்டும். வெற்று முன்மொழிவுப் படிவத்தில் கையொப்பமிடுதலை தவிர்த்தல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் சந்தர்ப்பத்தில் உண்மையற்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின், உங்களினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படக்கூடும். காப்புறுதி ஒப்பந்தத்திற்கு வரும் பொழுது இரு தரப்பினரும் உண்மையான தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும் என்பது சட்டத்தின் நியதியாகும். இந்த நியதியை மீறுகின்ற காரணத்தினால் காப்புறுதி ஒப்பந்தத்தை இரத்துசெய்ய முடியும்.

INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

# காப்புறுதி ஒப்பந்தத்தை வாசித்து விளங்கிக்கொள்ளுதல் மற்றும் தவணைக் கட்டணங்களை கொடுப்பனவு செய்தல் என்பவற்றின் முக்கியத்துவம் என்ன ?



5.

காப்புறுதி ஒப்பந்தத்தை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வழங்குதல் வேண்டும் என இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் காப்புறுதி நிறுவனங்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. அதனால், நீங்கள் உங்களுக்கு இயலுமான மொழியில் காப்புறுதி விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்வதற்கும், காப்புறுதி ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் இயலுமாகும். காப்புறுதிப்பத்திரத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் பூட்கையின் பிரதியொன்றினைப் பெற்று அதனை வாசித்து அது உங்கள் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் அமைந்துள்ளதா உறுதிசெய்து கொள்ளுங்கள். ஏதேனும் காரணத்தினால் நீங்கள் பெற்றுக்கொண்ட காப்பறுதி தொடர்பாக திருப்தியடையாவிடின், காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட காலத்தினுள் ஓர் குறிப்பிட்ட கட்டணத்தின் கீழ் இரத்துசெய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் ஒப்பந்தத்திற்கு வருவதற்கு முன்னர் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் விளங்கிக்கொள்ளுதல் முக்கியமானதாகும். காப்புறுதி ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக ஒப்பந்ததாரர் முழுமையாக விளங்கிக்கொள்ள வேண்டியதன் காரணம், ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவே உரிமைக் கோரிக்கைகள் கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

ஆயுட் காப்புறுதிப்பூட்கையொன்று காப்புறுதியாளரின் கையில் கிடைத்து 21 நாட்களினுள் காப்புறுதியாளரினால் அது தொடர்பாக மீள சிந்தித்து முடிவெடுப்பதற்கு முடியும். அதன்படி, காப்புறுதிப் பூட்கையைத் தொடர்ந்து பேணுவதா, இல்லையெனில் இரத்துசெய்வதா என முடிவெடுக்க முடியும். நீங்கள் ஏதேனும் காரணத்தினால் காப்புறுதிப்பூட்கையை அந்தக் காலவெல்லையினுள் இரத்து செய்வதற்கான தீர்மானத்தை மேற்கொள்வீர்களெனில், காப்புறுதி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை கழித்து மிகுதி தவணைக் கட்டணங்கள் மீள்கொடுப்பனவு செய்யப்படும்.

அதேபோல் மூன்று வருட காலத்திற்கு தொடர்ச்சியாக தவணைக் கட்டணம் செலுத்தியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது ஒப்பந்தத்தில் உள்ள சாட்டப்பட்ட பெறுமதிக்கான காலம் மூன்று வருடத்திற்கு குறைவாக இருக்குமாயின், அதற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தர்பத்தில் நீங்கள் காப்புறுதிப்பூட்கையை இரத்துசெய்வதற்கு தீர்மானிப்பீர்காளராயின், அது தொடர்பாக காப்புறுதி நிறுவனத்துடன் கலந்துரையாடி முடிவினை மேற்கொள்ள முடியும். இதன்போது, உங்கள் காப்புறுதிக்கான தொகை எனப்படும் சாட்டப்படும் தொகை குறைவடையும். இந்த சாட்டப்படும் தொகை காப்புறுதி கணிப்பீட்டாளரினால் சான்றுபடுத்தப்படும். உங்கள் காப்புறுதிப்பூட்கையில் சாட்டப்படும் தொகை மற்றும் அது தொடர்பான ஏற்பாடுகளை வாசித்து விளங்கிக்கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். உரிய காப்புறுதிப்பூட்கையை கையொப்பமிடுவதற்கு முன்னர் இந்த ஏற்பாடுகள் தொடர்பாக உங்கள் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து, தரகர் நிறுவனத்திடமிருந்து அல்லது முகவரிடமிருந்து அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

எந்தவொரு காப்புறுதியிலும், காப்புறுதிக் கட்டணத்தை உரிய காலத்திற்கு முன்னர் செலுத்தி முடித்தல் வேண்டும். இல்லாவிடில், ஏதேனும் கொடுப்பனவுக் கோரிக்கையை மேற்கொள்ளும் போது, அந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதில் இருந்து அந்தக் கம்பனி விலக்குப் பெறும்.

# 6.

## காப்புறுதியில் ஏதேனும் முறைகேடுகள் இருப்பின் உங்களால் முறைப்பாட்டினை செய்ய முடியுமா ?




காப்புறுதித்துறையினுள் காப்புறுதிப்பூட்கை உரிமையாளருக்கு ஏதேனும் அநியாயங்கள் ஏற்பட்டால், அது தொடர்பாக முறைப்பாடொன்றினை மேற்கொண்டு பிரச்சினையைத் தீர்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன. காப்புறுதி பூட்கை உரிமையாளருக்கு உரிமைக்கொடுப்பனவு மேற்கொள்கையில் ஏதேனும் முறைகேடுகள் ஏற்பட்டால் உரிய காப்புறுதி நிறுவனத்தின் சிரே'ட முகாமைத்துவத்திற்கு முறைப்பாட்டினை செய்தல் வேண்டும். அதில் திருப்தியடையாவிடில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கோ அல்லது காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கோ முறைப்பாடினை செய்தல் வேண்டும். அவ்வாறில்லாமால் நீதிமன்றத்தில் வழக்கினையும் கோப்பிட முடியும்.

காப்புறுதி முகவரினால் மேற்கொள்ளப்படும் நிதி மோசடியின் போது, உரிய காப்புறுதி நிறுவனத்தினால் நியாயம் வழங்கப்படாத போது, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினைச் சமர்ப்பித்தல் பொருத்தமானதாகும்.

INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

# 7.



# இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை மேற்கொள்ளும் முறை

## காப்புறுதி தொடர்பான முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் காப்புறுதிப்பூட்கையாளரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவதுடன், அதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் உங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினைச் சமர்ப்பியுங்கள். காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் வழிமுறையை அறிந்து கொள்வதற்கு https://ircsl.gov.lk/list-of-insurance-companies/ எனும் இணைய முகவரியில் உள் நுழையுங்கள். நிறுவனம் நியாயமான காலப்பகுதியினுள் அதனைத் தீர்த்து, அது தொடர்பான பதிலை வழங்குதல் வேண்டும்.

உங்களுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் நியாயமான காலப்பகுதியினுள் பதில் கிடைக்காவிடில் அல்லது முறைப்பாடு தீர்க்கப்பட்ட முறை தொடர்பாக நீங்கள் திருப்தியடையாவிடில், உங்கள் முறைப்பாட்டினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு சமர்ப்பிக்க முடியும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் முறைதொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://ircsl.gov.lk/policyholder-complaints/ எனும் இணைய முகவரியில் நுழையவும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக காப்புறுதிப்பூட்கையொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக இந்த கையேடு வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் பொதுவான தகவல்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் காப்புறுதி பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பதிலீடுசெய்ய அல்லது இரத்துசெய்யமாட்டது. காப்புறுதிப் பத்திரம் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம், காப்புறுதி தரகர் நிறுவனம் அல்லது காப்புறுதி முகவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA


**சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு**
**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி - 0112 2396184-9 | பக்ஸ் - 0112 2396190
மின்னஞ்சல் - mder@ircsl.gov.lk

www.ircsl.gov.lk

https://www.facebook.com/Ircslofficialpage/

https://www.linkedin.com/in/insurance-regulatory-commision-of-sri-lanka-980722209/

https://www.youtube.com/channel/UCuM9RLGQTi7B2MM7PL7jfiA



பொறுப்பு மற்றும் துறப்பு

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த கைநூல் அச்சிடப்பட்டுள்ளதுடன், எந்தவிதமான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவதற்கு பதிலீடாக இதனைப் பயன்படுத்துதல் கூடாது.